JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **8/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 9** | Prosecution /Defence / Court | |
| Name | **A. கிருஷ்ணராஜ்** | Village | |
| Father's Name | **R. அங்கப்பன்** | Taluk | |
| | | Age | |

**A**1 , **A**2 **absent**. **U/s**.317 **Cr**.**P**.**C petition filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 03.06.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் பெருந்துறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து விட்டு தற்போது பணி ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 24.10.2015 ம் தேதி பெருந்துறை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்த போது பெருந்துறை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசனைப் பெற்று பெருந்துறை அரசு மருத்துவமனைக்குச் சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த சக்தி , த/பெ. அய்யாவு என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து பெருந்துறை காவல் நிலைய குற்ற எண். 793/2015 சட்டபிரிவு 294 (b), 342, 324, 506(2) ல் இ.த.ச. பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து கணம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், பெருந்துறை அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 24.05.2015 ம் தேதி காலை சுமார் 9.30 மணியளவில் சம்பவ இடமான சென்னிவலசு, பீரங்கி மேடு வாதி சக்தியின் வீட்டு அருகில் ரோட்டின் ஓரத்தில் பார்வை மகஜர் சாட்சிகள்

வெங்கடேஷ் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். பார்வை மகஜரில் சாட்சிகள் இருவரிடம் சாட்சி கையொப்பங்களை பெற்றேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் மேற்சொன்ன சம்பவ இடத்தில் வாதி சக்தியை எதிரி மகேஷ் அடிக்க பயன்படுத்திய இரண்டு கைக்கு அடக்கமான இரத்தக் கறை படிந்த கற்கள் இரண்டடையும் மற்றும் சம்பவ இடத்தில் கிடந்த இரத்தக் கறை படிந்த வெள்ளை மற்றும் பச்சை கட்டம் போட்ட இரத்தக் கறை படிந்த கிழிந்த நிலையில் இருந்த வாதி சக்தியின் அரைக் கை சட்டையும் மேற்படி சாட்சிகள் வெங்கடேஷ் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகள் இருவரிடம் சாட்சி கையொப்பங்களை பெற்றேன். வெங்கடேஷ் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்தேன். சம்பவ இடத்தில் இருந்த ஆஜர் சாட்சிகளான ஆறுமுகம், ரவி, அய்யப்பசாமி,வேலுச்சாமி, வெங்கடேஷ் மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்தேன்.

4. பின்னர் சம்பவ இடத்திலிருந்து புறப்பட்டு பெருந்துறை அரசு மருத்துவமனை சென்று மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த வாதி சக்தி மற்றும் உடன் இருந்த அவரது மனைவி விஜயா ஆகிய இருவரையும் விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்தேன். பின்னர் விசாரணையில் சம்பவம் உண்மை எனத் தெரிய வந்ததின் பேரில் எதிரிகளை தேடி வரும் போது இடையில் கிடைத்த தகவலின் பேரில் பெருந்துறை வண்ணாம்பாறை பஸ் ஸ்டாப் அருகில் நின்று கொண்டிருந்த எதிரி 2 கௌதம் என்பவரை உடன் வந்த சாட்சி அடையாளம் காட்ட அவரை பிடித்து விசாரிக்க தானாக முன் வந்து தன் குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் 24.05.2015 ம் தேதி பகல் 11.30 மணியளவில் மேற்படியாரை கைது செய்தும் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்புவிக்கப்பட்டது. பின்னர் அன்றையதினமே மேற்படி எதிரியை அடைப்புக் காவல் அறிக்கையின் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

5. பின்னர் 1 ம் எதிரி மகேஷை தேடி வந்த நிலையில் மேற்படியார் வாதி சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய நிலையில் ஈரோடு முதன்னை அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை மனு தாக்கல் செய்து 02.11.2015 ம் தேதி நீதிமன்ற முன் பிணையில் சென்றுள்ளார். பின்னர் இவ்வழக்கின் சொத்துக்களை நீதிமன்றத்தில் பாரம் 91 ன் மூலம் ஒப்படைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இவ்வழக்கில் காயம் பட்ட வாதிக்கு காயச் சான்று பெற்று மேற்படியாருக்கு சிகிச்சை அளித்த பெருந்துறை அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி. பிரேம் நவாஸ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினமே இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து 26.05.2015 ம் தேதி எதிரிகள் மீது 294 b, 342, 324, 506(2) இதச வில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 23.10.2015 ம் தேதி மாலை 5.30 மணி என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது 24.10.2015 ம் தேதி காலை 8.30 மணி என்றால் சரிதான். 24.10.2015 ம் தேதி காலை 7.00 மணிக்கு தான் மருத்துவமனைக்கு சென்று வாக்குமூலம் பெற்றேன் என்றால் சரிதான். பின்னிட்டு மீண்டும் காயம் பட்டவரை விசாரணை செய்தேனா என்றால் ஆமாம் அன்றையதினமே விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை நான் கைப்பட எழுதி பதிவு செய்தேன் புகார்தாரர் சொன்னதை எழுதி பதிவு செய்தேன். மீண்டும் விசாரணைசெய்ததை மருத்துவமனையிலேயே எழுதிக் கொண்டேனா என்றால் இல்லை குறிப்பு எடுத்துக்கொண்டு காவல் நிலையம் வந்து எழுதிக்கொண்டேன்.

2. மீண்டும் விசாரிக்கும் போது புகார் வாக்குமூலத்தில் சொன்னதை தவிர்த்து கூடுதலாக வேறு ஏதாவது சொன்னாரா என்றால் இல்லை. என்னுடைய குவிமுச 161(3) ன் கீழான வாக்குமூலத்தில் அ.சா.1 எதிரிகள் கௌதம் பைக்கை வந்த வழியிலேயே திருப்பி ஸ்டார்ட் செய்து ஓட்ட பின்னால் மகேஷ் ஓட மேற்படி மண்திட்டின் மீது கால் இடறி மகேஷ் குப்புற விழுந்து விட்டார் என்ற சங்கதியை அ.சா.1 புகார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய

குவிமுச 161(3) ன் கீழான அ.சா.1 வாக்குமூலத்தில் என் கணவர் கொடுத்த வாக்குமூலத்தின் பேரில் பெருந்துறை SI விசாரித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தட்டச்சு பிழை காரணமாக அவ்வாறு வந்துள்ளது.

3. என்னுடைய குவிமுச 161(3) ன் கீழான வாக்குமூலத்தில் அ.சா.1 கூடுதலாக சொன்ன சங்கதியை சாட்சி ஆறுமுகம் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.7 மாதிரி வரைபடத்தில் தண்ணீர் டேங்குக்கு கிழபுறமாக சம்பவம் நடந்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சிகளின் விசாரணையில் தண்ணீர் டேங்குக்கு வடபுறமாக சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். அ.சா.பொ. 2 கல்லின் வகை குறித்து கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவரை விசாரித்து ஸ்கேன் ரிப்போர்ட்டை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மருத்துவரை நான் எப்போது விசாரித்தேன் என்றால் 26.05.2016 ம் தேதி விசாரித்தேன்.

4. சம்பவம் நடந்து சுமார் 7 மாதங்கள் கழித்து தான் மருத்துவரை விசாரித்தேன் என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கை 7 மாதங்கள் கழித்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரிகளுக்கு ஏற்பட்ட காயத்தை பற்றி நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வாதியும், ஹிந்திக்காரர் ஒருவரும் வாட்டர் டேங்க் அருகில் மது குடித்து கொண்டிருந்தார்கள் என்றும் அதனை எதிரிகள் 2 பேரும் மது குடிக்க கூடாது என்று தட்டி கேட்டதன் பேரில் பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் வண்டியில் செல்லும் போது வாதி துரத்திக்கொண்டு சென்று தானாக காயத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

5. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி கொடுத்த பொய்யான புகாரை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை